உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20
ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356
பத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஸு மாசிமீ உஉ உ வெள்ளிக்கிழமை (௫-௩-1976) [இல: சரு

## உலக இந்து மாநாட்டுக்கு
## இலங்கைப் பண்டிதமணி விடுத்த வேண்டுகோள்

### வேதாகம நெறி மாநிலம் எங்கணும் சாதனை ஆகட்டும்

"பிரமத்தை அறிய ஆசை என்று தொடங்கிய பிரம சூத்திரத்தில் இரண்டாம் சூத்திரம் எங்கிருந்து இதன் தோற்றம் முதலியன என்று உலகத் தோற்றத்தின் மூலமாகிய முதலை விசாரிக்கின்றது. கயிற்றரவு வெறுந் தோற்றமேயாயினும் கயிருகிய முதலைக் காண்பதற்கு உபகாரமாயிருக்கிறன்து. 'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என்பது திருவாசகம். 'வேதநூல் உலகர்க்கு' என்கின்றது சித்தியார். உலகர் ஆவார் எங்கிருந்தும் இதன் தோற்றம் என உலகத்தை ஆராயும் வேத இருடிகள் முயன்று காணும உண்மை சத்நிநிபாதர்க்கு முயலாமலே பூர்வதவ விசேடத்தாழ் லபிக்கின்றது. அப்பொழுது அதற்கு ஆகமம் என்று பெயர். வேதம் ஆகமம் என்ற சொற்களே இதனை விளக்கும்"

சென்ற 29 2 76 ஞாயிறு தொடக்கம் காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களினுல் சென்னையில நடாத்தப்பட்டுவரும உலக இந்து மகாநாட்டுக்கு உதவிய பிரார்த்தனை உரையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

பண்டிதமணி அச்செய்தியில 'நமது சமயம் வைதிக சைவம். வேதநெறி வந்த சைவம் என்பது கருத்து சைவம் ஆகம நெறி. 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்பது பெரிய புராணம், இங்கே கண்ட வேதாகம நெறி உலக இந்து மாநாட்டில் தவசிரேட்டர்களான காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அங்கீகார ஆசியைப் பெற்றுப் பயன் செய்வதாக என்று திருவருளைப் பிரார்த்திப்போமாக" என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். ——



### பசுக்களைப் பராமரித்துச் சிவபூசை செய்த சண்டேசுர நாயனுர்

[சிவஸ்ரீ க லோகநாதசர்மா அக்கரைப்பற்று]

(முன் வளர்ச்சி - 5)

உண்மையான நிலைபெற வேண்டுமாறு "நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு' திருத்தொண்டுகளைச் செய் என நம் நெஞ்சைச் சேட்கிருர் ஒவ்வொரு உறுப்பிற்கும் ஒவ்வொரு தொண்டினைக் சொல்லித்தச் செய்யுமபடி பணிக்கிருர். தமது திருவங்க மாலைபால் அவ்வாறு "பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றிலை, காப்பர் நம்மைக் கறைமிடற்றண்ணலை" என்றும் கூறுகிருர்.

"எண்ணிலாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" என்று சேக்கிழார் சுவாமிகளும் சொல்கிருர் இந்திரன் முதலான தேவர்களெல்லாம சிவபூசை செய்வதாலேயே மேலான பதவிகளை அடைந்துள்ளார்கள் எனத்திருவிளையாடற் புராணமுங் கூறும் 'இத்தகைய சிவபூசையியற்றுநரைப் பணிவோரும் மேத்துவோருஞ் சிந்தமுறநினைவோரும் மேலான சிவலோகஞ் சேர்ந்து வாழ்வர்" என்னுஞ் சூதசங்கிதைச் செய்யுட்படி இச்சண்டேசுர நாயனுர் நம் சிவபூசையினைச் செவ்வையாகச் செய்தார்.

தமக்த அடிபட்டபோது அறியாதிருந்த இவர் பாற்குடம் சிதறப் பூசைத்தடை சேர்ந்தபோதே கோபங் கொண்டார். பாற்குடத்தை இடறியவன் அந்தணனுயும, தந்தையாயும், குருவாயும இருந்தும பாராது அவனது தாள்களைத் தடிந்தார். இச்செயல் சிவபூசையில் உள்ள விருப்பத்தினுலும்,

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### பெருந் திருவிழா

பங்குனி மீ 3-ம் திகதி 16 3.76 செவ்வாய்க்கிழமை திருக்கோணேஸ்வரத்தில பெருந் திருவிழாக்கள் ஆரம்பமாகின்றன. அவ்வமையம் திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபையார் "பாலாவி" தீர்த்தத்தைப் பக்தி சிரத்தையோடு கோணேஸ்வரப் பெருமானுர்கு அபிஷேகம் செய்விப்பார்கள்.

#### வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

இப்பொழுது நடைபெறுகின்ற பெருந் திருவிழாக்களில் இயல் இசை நிகழ்ச்சியாகக் கிரமமாகத் தமிழமணி சி. கணேசசுந்தரம அவர்கள் கதாப்பிரசங்கம செய்து வருகின்றனர்.

திருவீதிவலம் சிறப்பாக நாடோறும் நிகழும் பொழுது அடியார்கள பெருந்தொகையாகக் குழுமி அருளபெறுகின்றனர்

## தாயின்சிறப்புசாலப்பெரியது

[செல்வன் க. குமாரதேவன், தெல்லி, மகாஜநக்கல்லூரி]

(முன் வளர்ச்சி - 2)

கங்கா, யமுனு, சிந்து காவேரி என்றுகூறும் சொற்கள் ஆற்றைத் தாயாகப் பாவித்து அழைக்கும மனப்பான்மையைக் காட்டுகின்றன.

இளங்கோவடிகள் காவிரி ஆற்றைத்தாயாக உருவகித்து அன்புடன் பாடுவதைச்சிலப்பதிகாரத்திற் காணமுடிகின்றது.

தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகத்தை ஆளக் கூடிய தன்மை வாய்ந்தது

இறைவனையும் மக்களையும் குறிப்பிடும் பெயர்களில் பெண்மைக்கும் தாய்மைக்கும் முதலிடம் கொடுத்திருந்துள்ளமையை நாம் அறிலாம். மீனாட்சி சுந்தரன், கௌரிசங்கரன, வள்ளிமணுளன், சீதாராமன் ஆகிய பெயர்களில் முற்பகுதி பெண்மையின் பெயராக இருப்பது நமக்குத் தெளிவாகின்றது.

செல்வம் படைத்த நற்செல்வியைப் பாக்கியம பாக்கியவதி என்றும், அன்னதானம புரியும் அறச் செல்வியை அன்னபூரணி என்றும் அகிலம முழுவதையும் ஆட்டுவிக்கும் சக்தியை அன்னை பராசக்தி என்றும் அழகான பெயர்களால் அழைக்கின்ருேம்.

இன்னும் இயற்கையினைக் கூட இயற்கையன்னை என்றுதான் அழைக்கின்ரும் நாட்டில் புயல்காற்று மழைவெள்ளம் என்பவற்றுல் சேதம் ஏற்பட்டால் இயற்கை அன்னையின் சீற்றத்தால் இது நிகழ்ந்ததாகக் கூறுகின்ருேம.

மக்கள் தமக்குத் தாங்க முடியாத துன்பம வேதனை ஏற்படும போதெல்லாம் "அம்மா" "அம்மா" என்று சொல்லி ஆற்றுவதை நாம் காண்கின்ருேம.

இவற்றிலிருந்து தாய்மையின் சிறப்பையும் பெருமையையும

(வளர்ச்சி 2 ஆம்பக்கம்)

ஆரோக்கிய வாழ்வுக்கு
பனம் பொருளை
உபயோகியுங்கள்

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ மாசிமீ உஉ-வ வெள்ளி

## முழங்காவில் அமைக்கும் முன்மாதிரி

முன்னொரு காலம் பூநகரியிலும் அதன் நாலா பக்கங்களிலும் பெரும் அளவில் நெல்லும் சிறுதானியங்களும் விளைகின்ற கழனிகள் பல இருந்தன என்ற உண்மையை எடுத்துக்காட்டுவன அங்கிருக்கும் ஆலயங்கள். திருக்கோயிலுள்ள தாயின் திருவுடையதாய் ஊர் இருக்கும் என்ற கருத்தை அப்பர் அடிகள் திருக்கோயில்லாத திருஇல் ஊரும் என்று பாடி விளங்க வைத்திருக்கின்றனர்.

பூநகரி பல்லவராயன் கட்டு பொன்னவெளி கிராஞ்சி முழங்காவில் ஆத்திமோட்டை வெள்ளாங்குளம் ஆகிய ஊர்கள் தோறும் கோயில்கள் பலப்பல பழையனவாகத் தோற்றம் அளித்தபடி இருக்கின்றன பல ஆண்டுகளுக்கு முன் இவை யாவும் செல்வம் கொழிக்கும் கமம் நிறைந்த குறிச்சிகளாகத் துலங்கியிருத்தல் வேண்டுமென்பதை வரலாற்று விபரங்களும் உண்மைப்படுத்துகின்றன. ஆனால் இடைக்காலம் ஒன்று எய்தி இடர்க்காலமாக மாறி வளம் செறிந்த நாட்டை வனம் பெருகிய காட்டு நிலமாக்கிவிட்டது. அதன்பின் பழையபடி இந்த இடங்களை எந்த விதத்திலும் நன்னிலமாக்குதல் வேண்டுமென்று முயன்ற கமக்காரருக்கு ஒருவகையில் அரசினரும உதவி, இப்பொழுது ஓரளவுக்குப் பயிர்ச் செய்கை சீரடைந்து வருகின்றதென்றால் ஆங்காங்கமைந்திருக்கும் ஆலயங்களின் அருட்டிறமேயாம் இந்தக் கோயில்களில் ஆராதனைகள் தவறாது நிகழ்ந்து வந்திருப்பது பாராட்டுக் குரியது. அந்த அர்ச்சனையின் பயனாலன் ஆங்கு மக்கள் திரும்பவும் சென்று நிலவளத்தை செறிச்செய்ய வைத்ததென்று நாம் உறுதியாகச் சொல்கின்றோம்.

இந்த நூற்றாண்டிலே பழம்பெருந் திருக்கேதீச்சரமும் புனருத்தாரணமாகித் திகழவே பூநகரி தொடக்கம் மாந்தை வரைக்கும உள்ள பரந்ததேசம மறுபடியும் ஒளிமயமாகி ஓங்கிவருகின்றது. யாத்திரை செய்பவர்கள் காடும், கான்யாறும், மேடும், கானல் வெளியும் கடந்து திருக்கேதீச்சரம் நோக்கிச் செல்லும் பொழுதெல்லாம் சிவசிவ என்று அரன் நாமம் ஆற்றித் திருமுறையோதும் செந்நெறி இந்தச் செம்மைக் கேதுவாயது. இத்தகைய சூழலிலே முழங்காவில் என்ற பழம் ஊரிலே தானாகத்தோன்றி வைகும் கணபதிக் கடவுளுக்கு யாத்திரிகள் பூசைசெய்யும் வாய்ப்புக் கிட்டியது. புத்தெழுச்சியடைந்த இத்தலத்தில் சித்திவிநாயகப் பெருமானுக்குக் கோயிலமைக்கும் எண்ணமும் அடியார்களுக்குதித்தது. முழங்காவில் முதல்வனின் அருளால் இவ்வூரிலேயுள்ள அடர்ந்த காடுகளை அழித்துப் பயிரிடுவதற்கோர் திட்டத்தை அக்காலத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபதியாகக் கடமையாற்றிய பெரியார் வகுத்ததன் வழியாகக் குடியேற்றம பரந்ததுமல்லாமல் இக்கோயில் வழிபாட்டொழுங்கு கிரமமாக நிகழ்ந்து வருகின்றது மன்னாருக்கும் சங்குப்பிட்டிக்கும் போக்குவரத்துப் பேருந்து மூலம் பயணஞ் செய்கின்றவர்கள் முழங்காவிலில அரைநாழிகைப் பொழுது தங்கியே செல்லுவது வழக்கமாகையினால் இக்கோயிற் பூசகர் நாள் முழுவதும் பல தடவைகளில விபூதிப்பிரசாதம் பிரயாணிகளுக்கு வழங்கும் ஒழுங்கும் உண்டு.

எனவே முழங்காவிலில் ஓர் முன்மாதிரிச் சைவநெறி முறிகண்டியிற்போல நிகழ்வது நல்லதோர் அறிகுறியெனலாம் குடியேற்றத் திட்டத்தின்கீழ் இவ்வூரிலே வசிக்கின்றவர்கள் செல்வயோக சித்தி விநாயகரின் பெருங்கருணைக்குரியவர்களாவது முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. இப்பெற்றிவாய்ந்த முழங்காவில் புனித நகரமாகப் பொலிய வேண்டியதவசியம் திருக்கேதீச்சரத்துக்குக் குடாநாட்டிலிருந்து யாத்திரை செய்கின்றவர்கள் நல்லூர், நகுலேச[illegible] நயினை, வண்ணை, மாவை, செல்வச்சந்நிதி, வல்லிபுரம் முதலிய திருக்கோயில்களுக்கும் மன்னார்ப் பகுதியிலிருந்து வழிபாட்டுக்குச் செல்கின்றவர்களும் பயணத்தை நடுவிலே பயபக்தியுடன் ஆறித்தொடர்வதற் [illegible] ஆகையால இந்நகரம [illegible] அவசியமுமாகும்.

பெரிய புராணம் பேசும்

## செங்கோன்மை

[ ஆசிரியர் திரு. சி. சிவரத்தினம் ]

நாவலர் பெருமானுக்கு பெரிய புராணம் என்றால் உயிர். பெரியபுராணச் செய்யுள்களை வசனநடையிலாக்கி பெரிய புராண வசனத்தை சைவ உலகுக்கு அளித்தவர் இதனால் வசன நடை கைவந்த வல்லாளர் எனப் போற்றப் படுகின்றவர் நாவலர்.

இப்புராணத்தின் அதி அற்புத சத்தியை உணர்ந்து அதற்கு ஒரு சூசன நூலையும் ஆக்கினர் நாயன்மார் திருவருட் செயல்களின் உட்பொருளை ஆய்ந்து அதனை உலகில் மேன்மை பெறச் செய்தவர் நாவலர் புராணத்தின் சில பகுதிகளை ஆக்கியுள்ளார்.

பெரியபுராணத்திற்குநாவலர் செய்த சூசனப்பகுதியில் மநு நீதிகண்ட சோழச் சக்கரவர்த்தியின்செங்கோன்மைச் சிறப்பால் பெரிய புராண நீதியைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதுதான் சைவ நீதி. மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம் என்று அறிவுறுத்துகின்றதும் நமது புராணம். ஆனால் நாம் எல்லாம் சைவநீதியைக் கைவிட்டு வேறு வாயில்கள் மூலமாக நீதியை எதிர்பார்க்கின்றோம்.

மநுநீதிகண்ட சோழன் பசுக்கொலைக்குஉயிர்த்தண்டமல்லாத பிராயச்சித்தம் மிருதியில் விதிக்கப்பட்டமையால் அக்குற்றத்தின் பொருட்டு பிராயச்சித்தம் செய்து கொள்ளுதலன்றி மகனைக் கொலை செய்தல் தகுதியன்றென்று மந்திரிகள் தடுப்பவும் நடுவு நிலைமை சிறிதும் தவறாது அவனைத் தேர்க்காலில்வைத்து ஊர்ந்த பெருந்தன்மை கொண்டவராதல் ஈண்டு கவனிக்கற்குரியது.

"அவ்வுரை கேட்ட வேந்தனுவறு துயரமெய்தி, வெவ்விடந்தலைக் கொண்டாற்போல் வேதனை யகத்து மிக்கிங், கிவ்வினை விளைந்த வாறென்றிடாறு மிரங்கு மேங்கும். செவ்விதென் செங்கோலென்னுந் தெருமருள் தெளியுந் தேருன்"

"மன்னுயிர் புரந்துவையம் பொதுக்கடிந் தறத்தின் வீடு. மென்னெறி நடாத்து மெனனுமென்செய்தாற் றீரு மெனனும். தன்னிளங் கன்று காணாத தாய்முகங் கண்டு சோரு, மந்நிலை யரச னுற்ற துயரமோ ரளவிற் றன்றேல்"

இவர் தம்முடைய மகனைத் தேர்க்காலில் வைத்து ஊர்ந்தமையால் அவனிடத்து இரக்கமில்லாதவரென்பது பெறப்படு மன்றோ வெனின் அற்றன்று. பூமியிலே வெளிப்படப் பாவஞ் செய்தவர்களைத் தண்டித்தல் அரசனுக்கும், வெளிப்படாமற் பாவஞ் செய்தவர்களையும் வெளிப்படப் பாவஞ் செய்தவர்களுள் அரசனாலே தண்டிக்கபடாதவர்களையும் மறுமையில் நரகத்தில்தண்டித்தல் இயமனுக்கும கடனும் ஆதலானும் தாம் செய்த பாவத்தின் பொருட்டு இம்மையில் அரசனாலே தண்டிக்கப் பட்டவர்கள் அப்பாவத்தின் பொருட்டு மறுமையில் நரகத்திலே தண்டிக்கப் படார்கள் ஆதலானும் தம்முடைய மகன் பசுக்கொலைக் குற்றத்தின் பொருட்டு மறுமையில் நரகத்துன்பம் அடையாவண்ணம் தாமே இம்மையில அவனைத் தண்டித்து அப்பாவத்தை ஒழித்தார் ஆதலால் அவ்வுயர்த தண்டத்துக்குக் காரணம அவனிடத்தில வைத்த இரக்கமென்றே துணியப்படும்'

பசுக் கொலை செய்தவர்களுக்கு உயிர்த் தண்டமல்லாத பிராயச்சித்தம் மிருதியில் விதிக்கப் பட்டதாயின் இவர் உயித்தண்டஞ் செய்தமை குற்றமன்றோ எனின் இந்தப் பசுவானது தனவினம் போலன்றி மனிதருக்குரிய அறிவையுடையதாகி ஆராய்ச்சி மணியை அசைத்தமையால் எல்லையின்றி எழுந்த இரக்கம் பற்றி அப்பசுவின் கன்றைக் கொன்றமை மனிதரது குழந்தையைக் கொன்றமையாகக் கொண்டாராதலாலும் சிவனது திருவாரூரிற் பிறந்த உயிரைக் கொன்றமை சிவாபராத மெனத் துணிந்தாராதலானும அது குற்றமாகாது புண்ணிய மாயிற றெனவுணர்க.

"அவ்வுரையில் வருநெறிகளவை நிற்க வறநெறியின், செவ்வியவுண் மைத்திறநீர் சிந்தை கிசைய துரைக்கின்றீர், வெவ்வுலகி லிபபெற்ற மிப்பெற்றத தாமிடரால, வெவ்வுயிர்த்துக கதறிமணியெறிந்து விழுந்ததுவிளப பீர்.'.

"போற்றிசைத்துப் புரந்தரன் மாலயன் முதலோர் புகழ்ந்திறைஞ்ச வீற்றிருந்த பெருமானார் பேணிபுறைதிருவாரூர்த தோற்ற முடை உயிர் கொன்று துகலினாற் றுணி பொருடா னற்றவு மற் றவற்கொல்லு மது வேயா மெனநினைமின."

என மனுச்சக்கர வர்த்தி கூறியதைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணச் செய்யுளில் படம் பிடித்துக காட்டுகின்றார்.

(வருளும்)

### அறுவடை விழா

சங்கரத்தைப் பதி ஸ்ரீ பத்திர காளியம்மை திருவீதி முன்றிலில் அனை வழிபாட்டுடன சென்ற 2-3-76 அன்று அறுவடை விழா கோலா கலமான முறையிற் கொண்டாடப் பெற்றது. முற பகலில அன்னைக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்ந்தன அதையடுத்து, யாழ் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் தே. பே உறுப்பினர் பொது மக்கள் ஆகிய பலரும் சமுகமாக இருந்தனர். சிறுமிகளின் நடனநிகழச்சியைபடுத்து அன்ன தானமும் இடம்பெற்றது.

### திறப்பு விழா

குருநாகல் இந்து தமிழ் மகா வித்தியாலய புதிய கட்டிடத் திறப்புவிழா 3-3 76 புதன முப, 10 30 மணியளவில் திரு. மு. இராமலிங்கம அவர்கள் தலைமையில் திரு. பியதாச விஜயசங்க தே. பே. உ. குருநாகல) அவர் புதிய கட்டிடத்தை திறந்து வைத்தனர்.

### தாயின் சிறப்பு

1-ம் பக்க வளர்ச்சி

நன்கு அறிய முடிகிறது

நந்தமிழ்த தாயின் இனிமையையும ஏற்றத்தையும இனிதியம்பும் பாடல்கள பலவுள.

அவற்றுள் இதோ ஒன்று

"மூவேந்தர் தாலாட்ட முச்சங்கத்தே கிடந்து பாவேந்தர்
செந்நாவில் நடைபழகி
மொழிபயின்று
மங்குலுறை வேங்கடமும்
வான்குமரிப் பேராறும்
தங்குமிடைத் தமிழுலகம்
அரசுபுரி தமிழ்த்தாயே"

என நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார். இன்னும் தாய்க்குலத்தின் பெருமையினை

"மங்கைய ராகப் பிறப்பதற்கே
நல்ல
மாதவம் செய்திடவேண்டு
மம்மா
பங்கையக்கைநலம் பார்த்தல்
லவோ இந்தப்
பாரினில் அறங்கள்
வளருதம்மா"

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் அழகாகப் பாடியுள்ளார்கள்.

"சக்தியின்றிச் சிவனில்லை" என்ற அறிஞர் வாக்கும் "சக்தியிருந்தாற் செய் இல்லாவிட்டாற் சிவனே என்றிரு" என்ற பழமொழியும் தாய்மையின சிறப்புக்கும் பெருமைக்கும் சான்றணி வைத்தாறபோல் விளங்கும்.

— —

### பசுக்களைப் பராமரித்து

1ஆம பக்க வளர்ச்சி

உறுதியினாலும் நேர்ந்ததாற் பாதகமாகாது புண்ணியமாயிற்று. இதனாலேயே

"தாதைவேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந்தான் றனக்குத் தாரடைந்த மாலை சூட்டித தலைமை வகுத்ததென்னே" என்று சம்பந்தரும்

"தாதைதாளை பெருங்கொடு மழுவால் வீசக் குழைந்த தோரமுதமீந்தர் குறுக்கை வீரட்டனாரே" என்று அப்பரும்.

"தாதை தாளற வெறிந்த சண்டிக்குன் சடைமிசை மலரருள் செயக்கண்டு" என்று சுந்தரரும்.

'சாதியும வேதியன் றாதை தனைத் தாளிரண்டுஞ் சேதிப்ப ஈசன் திருவருளாற் தேவர் தொழப் பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்"

பசுவினது உடப்பெங்கும் தேவர்கள் வசிக்கிறார்கள்,

( வளரும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார் சுவாமிகள் கண்ட தமிழகமும் இல்லறமும்

[ செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

(முன் வளர்ச்சி - 7)

தேவர்களாலும் அளப்பதற்கரிய பெருமையும் அருமையும் வாய்க்க பெரியபுராணத்தின் பேசப்படும் அடியார்களின் வாழ்க்கைத் திறனே தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் ஒருவர்தான் கூறவல்லார் இதுகாறும் தமிழகத்தைப் பற்றியும் தமிழகம் ஈன்றெடுத்த புதல்வ ரத்தினங்களாகிய ஞானவான்களைப் பற்றியும் எம்சிற்றறிவுக் கெட்டிய அளவில் ஆராய்ந்தோம் இல்லறத்தைப்பற்றி சேக்கிழார் சுவாமிகள் கூறும் கருத்துக்களை ஆராமுன் தற்காலநிலையைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றபடி நம் நாட்டு மக்களின் மனநிலை பெரிதும் மாறுதல் அடைந்துள்ளது அதற்குக் காரணங்கள் பல உள.

அளவுக்கு மிஞ்சிய விஞ்ஞான வளர்ச்சியுமதான இக்காலப்பண்பாட்டின் சீர்கெட்ட நிலைக்குக் காரணம்

படக்காட்சி, ரெலிவிசன் காட்சி (Television) ஆகாய விமானத்தினுல் உலகம் சுருங்கியிருத்தல், பற்பல உள்ளீடில்லாத கதைகள் நாடகங்கள் மின்சாரத்தினுல் அரித பொருள் உற்பத்தி சனப் பெருக்கம் உணவுப் பற்றாக் குறை வேலையில்லாத் திண்டாட்டம் நேர்மையான வழியில் தனக்குரியபணியைச் செய்யாது ஊதியம் பெறுதல் எவ்வழியாலும் பணம் வந்தால் சரி என்ற கொள்கை பெரியோரைமதியாமை பயபக்தி இன்மை ஆடம்பர விருப்பம், வரவுக்குமிஞ்சிய செலவு பற்பல கொள்கைகளைக் கொண்ட மக்களின் எண்ண அலைகள் முதலியன உலகமக்களின் உள்ளத்தை அரித்து வாட்டுகின்றன ஈழ நாடாகிய இலங்கையும் இந்தச் சுழல்வளிக் காற்றில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது செத்தச் செத்துப் பிறக்கிறது. இப் பொய்க்க மாய உடல் வாழ்க்கை மெய்யென்று எண்ணி அல்லும் பகலும் பொன் போன்ற நேரத்தைப் பாழாக்குகிறார்கள். உலகாயுத மதமே தாண்டவம் ஆடுகிறது.

தத்துவ ஆராச்சி மக்களின் உள்ளத்தில் வேரூன்ற வேண்டும் நான் ஆர் என்உள்ளம் ஆர் என்று ஆராய்ச்சி வேண்டும். நாலும் வேறு உடம்பு வேறு நாம் நன்கு உணர வேண்டும் நின்னணி நீபுல்ல வாயின காயினன்னை அன்னிய மாரும் உன்னை எற்றுத் நீபிரிந்து பாம்பு என்பது ஒளஞானசித்தியார் வாக்கு.

(வருளம்)

---

நேயர்கள் நெஞ்சம்

# ஒண்டொடியார் உடை உடைவது - உள்ளத்தை உடைக்கின்றதே?

ஐயா,

27-2-76 இந்துசாதனத்தின் ஆசிரியத் தலையங்கமும், நேயர் நெஞ்சததில் 'சுகப்பிரியன்' எழுதிய கட்டுரையும் 'பக்தர் சித்தர்' எனும் பகுதியும் கண்டு பனம் மிக மகிழ்ந்தேன். நானும் ஒரு இந்துப் பெண் என்ற முறையில், தடம் மாறிச் சென்று கொண்டிருக்கும் எமது சமுதாயப் பெண்களை நினைத்து வெட்கங் கொள்கிறேன்.

பொட்டிட்டுப் பூச் சூடி, மஞ்சள் பூசி மதிப்பான துகிலணிந்து, அமரலோகத்து அரம்பையரெனத் திகழ வேண்டிய நம் பெண்கள், 'மினி'யணிந்து வ்'சன்'கள் போலத் திரிவது வெட்கத்துக்குரியதே இதை, 'வெளிப்பிற் சொன்னாலும் வெட்கமடி — சொல்லா விட்டாற் துக்கமடி.....' என்ற கவலையுடன் இங்கு எழுதினேன்.

'தலத மாளிகையிற்' செய்து காட்டப்படும் முன் மாதிரியை நெஞ்சிற் கொண்டு, நமது ஆலயங்களிலும், எமது இந்துக் கலாச்சாரத்துக்கு ஒவ்வாத உடைபணிந்து வருவோரை, அனுமதி மறுக்கவேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவர்களை இப்படி ஒதுக்கி வைத்தால் தாமாகவே திருந்தித் தமது பண்பாட்டின் பெருமையை உணர்ந்து கொள்வோம்.

இதனால், மதப் பெருமையும் சிறக்கும், பண்பாடும் பிழைக்கும்.

உணர்ச்சிப் பெருக்கையூட்டும் உங்கள ஆசிரியத் தலையங்கத்தை பலமுறை படித்த எனக்கு ஒரு சிறு கவிதையும் ஊற்றெடுத்தது. அதையும் மாணவியாகிய யான் இங்கு தருகிறேன். தகுதியாயின் இந்துசாதனத்தில் பிரசுரித்துதவுக:

x x x

'பொல்லாத சொப்பனம் நானும்கண்டேன்! அம்ம

தானன தனன தானனஅ
தன்னன தானன தானனஅ

''போடாதே! போடாதே!!
பொன் மணியே!!
பொல்லாத சொப்பனம்
கண்டேனடி!... ஐயா...!
நானும் பொல்லாத.....
மங்கையர் மானம்... ... ...
மறையக் கண்டேன்.........
எங்கள் மாண்பான நெறிதனை 18-2-76
வீசக்கண்டேன்! ஐயோ.....
ஐயோ! ஐயையோ! முறையோ!
காலுக்கு மேல் சட்டை ......
போட்டுக்கொண்டு பெண்கள்
கால் மேனி(யை)மட்டும்
மறைக்கக் கண்டேன்! ......
தமிழ்மானம்......போக.....

'மணி' என்ற ஒரு பெரும் சிறப்புப் பெயர் பெண் குலத்துக்குண்டு; 'பெண் மணி' என்று அழைப்பாரே தவிர 'ஆண் மணி' என்று ஆருமே அழைக்கக் காணோம்! அத்தகைய மணிகுலங்கள் 'மினியுடை' மோகத்தில் 'அன்னநடை நடக்கப்போய் தன்னடையுங் கெட்டுத் தடுமாறி, 'சீ!' என்று இகழுமளவு அலங்கோலத்துடன் பவனி வருவதை ஆர் பொறுப்பார்? எவர் சகிப்பார்? பருவப் பெண் குஞ்சுகள் மேனி மினுக்குவதற் காற்றங்கரைகட்டும் கவனித்து முக்காற்பாகத்தையும் மறந்துவிடுவது அழகா? அரைக் காசுக்குப் போனமானம் ஆயிரம் காசு கொடுத்தாலும் வராது...! என்பதை உணரவேண்டிய! இனி மனவறைவரையில 'மினி' வருமா? தாய்க்குலம் — பேய்க்குலமாகித் தா பண்பழிந்து .. திரிதை... இனியும் அனுமதிக்கப் போகின்றோமா? மணிகளே! எழுமின்! விழிமின்! தெளிமின்! உழைமின்! கருதிய கருமம் கைகூடும்வரை கருத்தோடுபட வருவீர்களாக.

கா சிவனேஸ்வரி,
'' ஆறுமுக வாசம் ''
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

---

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும்

## சித்தாந்தத் தேர்வுகள்.

### 1974–1976 தேர்வு விதிகள்

(முன் வளர்ச்சி — 5)

### சித்தாந்த பிரவேச பண்டிதர்

[5] உரைநடை :

1. பாலபாடம் — நான்காம் புத்தகம் (நாவலர்)
2. சைவபோதம் — 2 ஆம் புத்தகம் (யாழ். சைவபரிபாலனசபை வெளியீடு)
3. சைவவினாவிடை — 2 ஆம் புத்தகம் (நாவலர்)
4. சைவத்திருக்கோவிற் கிரியைநெறி — அதி 4 திருக்கோவில் அதி. 5 திருவுருவங்கள் கா. கைலாசநாதக்குருக்கள் M. A, Ph. D.
5. மகோற்சவ விளக்கம் — பிரமஸ்ரீ. குமாரசாமிக்குருக்கள்

### சித்தாந்த பாலபண்டிதர்

(1) இலக்கியம்:

1: திருக்குறள் 35—63 அதிகாரங்கள், பா. உரை.
2: கந்தபுராணம் – சூரபன்மன் வதைப்படலம் உரை
3: கந்தர் கலிவெண்பா-உரை
4: சேக்கிழார்நாயனர் புராணம்
5: சிவராத்திரி புராணம் —சிவராத்திரி புராணம். மான்மியச் சுருக்கம் – உரை (ஸ்ரீ காந்தா அச்சகம்)
6, திருச்செந்தூர்ப் புராணம் - அத்தியாயம் 6 — 8 (யா. சை. பா. ச. பதிப்பு)

(2) இலக்கணம் :

1. நன்னூற்காண்டிகையுரை (நாவலர்)
2. யாப்பருங்கலக்காரிகை — உறுப்பியல்
3. தண்டியலங்காரம் — பொருளணியியல்

3. திருமுறை

1. அகத்தியர் தோத்திரத்திரட்டு — உரை
2. திருவாசகம் — திருச்சதகம் - உரை
3. ஒன்பதாந் திருமுறை — உரை முழுவதும்
4. பதினோராந் திருமுறை — பட்டினத்தடிகள் கோயில் நான்மணிமாலை
5. பெரிய புராணம் — திருநாவுக்கரசு நாயனர்புராணம் (வளரும்)

---

### உற்சவ ஆரம்பம்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் மாசி மாதம் 23-ந் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

x x x

சகாரத்தை பத்திரகாளி அம்மை வருடாந்தத் திருவிழா 7-3-76 ஞாயிறு ஆரம்பமாக இருக்கிறது.

### இலவசம்

சிறுவர் பாடசாலைகட்குரிய அரிச்சுவடி மட்டைகள் பலகைவைற் தாபனத்தார் இலவசமாக, வழங்க இருக்கிருர்கள் தேவையானோர் அத்தாட்சிப் பத்திரம் கொடுத்துப் பெறுக் கொள்ளலாம்.

---

## துணை புரிவாய்!

'அருட்கவி' சீ. வி.

மோகனம்: ஆதி.

பல்லவி

துர்க்கா தேவியே துணைபுரியாய் — தினம்
தொழுதுனைப் பூசிக்கும் மனம் தருவாய் அம்மா (து)

அனு பல்லவி

முக்கோணாசல மூலா மந்திர
முதலே பரசுழி முனைதிகழ் தந்திர (து)

சரணம்

சங்குசக் கரச்சிலை டமருகம் உடிவேல்
வெங்குலி சங்கணை வீரிய சுடர்வாள
தங்கிய தாமரை தருகல சங்கொளும்
சவகரி மங்கள சிந்தித்தி லேவரும் (து)

---

சைவபரிபாலன சபையாரின்
பாடசாலை மாணவர்களுக்குரிய

## சைவசமய பாடப் புத்தகங்கள்

சைவ சமய நெறி 2ம் வகுப்புக்குரியது 75 சதம்
சைவ சமய நெறி 3ம் வகுப்புக்குரியது 1-75 சதம்
திருவருட்பயன் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை உரை
9ம், 10ம் வகுப்புகளுக்குரியது ரூபா 2·00
சைவ சமய பாடப் பரீட்சைக்கு உதவியானது.
தொகையாக வாங்குபவர்களுக்கு கழிவு உண்டு.

அதிபர்,
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
450, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

### திருவிழாவில் கந்தபுராண விரிவுரை

யாழ். அரியாலை சிவன்கோவில் வருடாந்தத் திருவிழா [7-3-76] ஞாயிறு ஆரம்பமாகின்றது. விழாக்காலத்தில் தினமும் மாலை 6-30 மணி முதல் நல்லை ஆதீன பரமாசாரிய சுவாமிகள் கந்தபுராண இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

x x x

நல்லூர் நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழா ஞாயிறு (7—3—76) ஆரம்பமாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

மொட்டலர் தாமரை மூன்றுள, மூன்றினும்
விட்டலர் கின்றனன் சோதி வீரிசுடர்,
எட்டலர் உள்ளே இரண்டலர் உள்ளுறில்
பட்டலர் கின்றதோர் பண்டங் கருவே.

The contents of the blossoming lotus bud are three-fold (the flower, the seed-vessel and the seed within it). The all-pervading luminous Lord pervades all three of them. Within the eight-petalled flower is the second the seed-vessel), and if one looks inside (the seed within, he will find) the incomparable Treasure (God) shining therein.

Hindu Organ

FRIDAY. MARCH 5, 1976

## Keerimalai - Keeping the Religious Tradition?

THE thousands of devotees, pilgrims and visitors who thronged the ancient Temple at Naguleswaram during the Maha Sivarathiri Festival, must have been musing within themselves whether the historical background of this hallowed shrine has been maintained. The holy waters of the Keerimalai spring that helped the remedying of the incurable disease of an Indian Princess and restored the human features, perhaps by the long passage of time, may have lost the divinity; but what could have been there to impair the physical features so very poetically described in the epics of Saiva Literature.

Keerimalai and Maviddapuram, two land marks of laudable and historical significance, mean much to the Saiva Public in particular and to the people in general. Centuries have rolled by since the occurrence of the spiritual revelations in these sacred places, But the areas surrounding these ancient towns have failed to build on the religious renown of the glorious past. On the other hand, the industrialization of the vast stretch between these two holy sites has grown in such volume that the entire area has become clouded with the floating dust of cement and the spreading smoke of the kilns of the factory. What could have been a pilgrim's paradise has been turned into an industrial centre supplying gpysum to the Cement Factory. Except for the temple towers of the two ancient shrines the bathing tank and one pilgrim's rest, the whole area now presents peculiar features that suppress the spiritual background.

Even as a tourist terminus, Keerimalai at are time had some attraction with pure water springing in the historic tank. But with the free flow of sea water into the tank, salinity has gained ground. The teakiosks and the restaurants add to the discrediting of this area. The dilapidated conditions of two 'Madams' make the decaying condition still worse.

If the people of this historical area have failed to take any interest in the restoration of the religious set-up. it is for Saiva Organizations to move in the matter of reclaiming the place for posterity to preserve the ancient spiritual magnificence of Nakuleswaram and Maviddapuram.

## Local Cultural Dynamism & Cultural Unity of Monsoon Asia

Dr. Senaka Bandaranayake, Senior Lecturer in Archaeology, Vidyalankara Campus delivered a very interesting instructive thought-provoking and useful lecture on Sri Lanka and Monsoon Asia—Patterns of Architectural and Historical Development, at the Jaffna Campus, under the auspices of the Jaffna Archaeological Society and Dept. of History, Jaffna Campus.

At the out-set he emphasized the cultural unity of Sri Lanka and said that this Sri Lanka culture was built up by both the Sinhalese and the Tamils.

Referring to the subject of his lecture, he said that so far many scholars have emphasized the forms and motifs of the Sri Lankan or other Monsoon Asian countries rather than the local dynamism as reflected in the culture and in this case the architecture. He pointed out the intimate relationship between the ideas behind the architectural forms and the Society.

Elaborating further, he cleared a misconception created by the colonial historiographers the diffusion theory. These scholars very often claimed no originality for the cultural forms of a particular locality. By way of examples, he pointed out the claim for the Greek origin of Indian sculptures or the Indian origin of South East Asian sculptures By stating so, he said that he didn't deny any possible inspiration for the examples, he cited. What he pointed out was that the colonial scholars claimed no credit for any local dynamism and that they were more concerned with the origin of the forms and motifs rather than historical dynamism of the society of a particular place — Sri Lanka, India or any other place. Another tendency, of the scholars was to divide and attribute the cultural forms of the Monsoon Asia stretching from India, Pakistan, Nepal, Thailand, China and Japan to two specific civilizations of the Indians or the Chinese and speak of Indianisation or Cinisation This was also not a satisfactory assessment. Further, in Sri Lanka, he pointed out as to how the Sinhalese civilization is related to the North Indian and the Tamil civilization to the South Indian civilization. But in reality, he emphasized, there is only one civilization, that is the Sri Lankan civilization contributed by the sons of the soil, the Sinhalese and the Tamils. By saying so, he said that he shouldn't be misunderstood as emphasizing that the Sri Lankan civilization developed in isolation.

He explained the concept of Monsoon Asia stretching from India, Pakistan to China and emphasizised the basic unity and the differentiation of cultures in Monsoon Asia. This part of the world is thickly populated, very fertile and also the home of some early civilizations. He underlined the Monsoon Asian matrix of culture.

He noted four ideas under 'forms and motifs' He said that each country could develop its own forms. It could also innovate and develop new forms and motifs. It could take ideas from other cultures and adapt them through its internal dynamism of culture. Lastly, these would also be imposed from outside. These aspects, he claimed, have not been treated fully in due perspective. The internal dynamism of change was not duly emphasized by any of the historians or archaeologists of Sri Lanka. Dr. Senaka Bandaranayake stressed this point in the course of his lecture, in respect of architecture in the Monsoon Asian countries.

In these countries he has noted two styles of architecture distributed all over this part of Asia. One was the masonry style of architecture. In this type, brick or stone has been exclusively used, whether it be in Sri Lanka or India or Pakistan or Thailand or China.

Second was the timber style of architecture.

These and other points were succinctly put forth by the speaker with great eloquence. The lecture was delivered in English but Sinhala and Tamil translations were given. The lecture was suitably illustrated with shells. His new approach is very interesting and he concentrated mostly on the circular buildings distributed all over Monsoon Asia.

The Joint Secretary of the Jaffna Archaeological Society Mr V. Sivasamy proposed the vote of thanks

## WORLD HINDU RELIGIOUS CONFERENCE

S. SIVASUBRAMANIAM
Life Member Saiva Paripalana Sabhai

The above conference is being held at Madras at the invitation of His Holiness the revered Sri Sankaracharya Swamigal of Kanchi and other eminent Hindu Savants — Delegates from Sri Lanka are among those participating. It is trusted that great good to the cause of religion and to the general welfare of humanity and of all creation of God will result from the Conference. It is very desirable to hold a sessions of this Conference or Congress in Sri Lanka, if convenient, perhaps the next sessions. It is also equally desirable to take steps to bring the Hindus all over the world together and to establish some kind of permanent or standing organization in this connection. Steps for the publication of a Hindu Encyclopaedia is also very necessary.

## Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1 - 1 - 1975 with Mr. S. Sinnathamby Sinco of Kandy Road, Kilinochchi on Thursday 25 - 3 - 1976 commencing at 9 a. m. at the said pawn shop.

643, K. K. S. Road,
Jaffna.

S Mahadevan.
Auctioneer
(40 5 & 12)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 400. K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday March 5, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org